| | | | |
|---|---|---|---|
| Headline | Report reveals ill treatment of employees with HIV | | |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 15 Dec 2016 | Color | Black/white |
| Section | News | Circulation | 65,000 |
| Page No | 2 | Readership | 415,000 |
| Language | Tamil | ArticleSize | 156 cm² |
| Journalist | N/A | AdValue | RM 454 |
| Frequency | Daily | PR Value | RM 1,361 |



# புறக்கணிக்கப்படும் எச்.ஐ.வி. நோயாளிகள்

கோலாலம்பூர், டிச.15

எச்.ஐ.வி. - எய்ட்ஸ் நோயாளிகள் வேலையிடங்களில் புறக்கணிக்கப்படுகின்றனரா? அது குறித்து மலேசிய எய்ட்ஸ் மன்றத்திடம் உடனடியாக புகார் செய்யலாம் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

எச்.ஐ.வி. - எய்ட்ஸ் நோயாளிகளுக்கான வேலை வாய்ப்புகள் அபகரிக்கப்படுவதாக கண்டறியப்பட் டுள்ளது.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர் களாக அடையாளம் காணப்பட்டதும் பல நிறுவனங் கள் சம்பந்தப்பட்ட வர்களை வேலையிலிருந்து நீக்கி யிருப்பதாகவும் மலேசிய எய்ட்ஸ் மன்றம் அறிவித்துள்ளது.

இதுவரையில் பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் அம்மன்றம் விசாரணையை முடுக்கி விட்டுள்ளது.

வேலையிடங்களில் எச்.ஐ.வி. - எய்ட்ஸ் விழிப்புணர்வ வழிகாட்டிகள் 2001- ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டன எனினும், அவை முறையாகப் பின்பற்றப் படுவதில்லை. மாறாக அந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மிக மோசமா நடத்தப்படுகின்றனர், அலட்சியம் செய்யப்படுகின்றனர் என எய்ட்ஸ் மன்றத் தலைவர் பக்தியார் தல்ஹா சாடினார்.

இது முற்றிலும் தவறான ஒரு செயலாகும். இவ்வாறு பாதிக்கப்பட்ட மேலும் பலர் மௌனம் சாதிக்கக்கூடும்.

தங்களுக்கு நேர்ந்திருக்கும் இந்த நிலைமை குறித்து அவர்கள் புகார் செய்ய முன்வரவில்லை என்றால், அவர்களைப் போல் மேலும் அதிகமானோர் பாதிப்புக்குள்ளாகக் கூடும் என பக்தியா எச்சரித்தார்.

Powered by: isentia